Reg. No. : ......................................

Name : ...........................................

**FY-220**

**FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, SEPTEMBER 2021**

Part – III

**TAMIL (Optional)**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 20 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 20 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 6 வரையுள்ள வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்குச் சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்.** **(3 × 1 = 3)**

1. புதுக்கவிதையைத் தோற்றுவித்தவர் ?

(அ) டி.எஸ். எலியட் (ஆ) எஸ்ரா பவுண்ட்

(இ) வால்ட் விட்மன் (ஈ) டிண்டன்

2. ஐந்து அடிகளால் ஆன ஹைகூ கவிதையின் பெயர் ?

(அ) இரெங்கா (ஆ) தான்கா

(இ) செடோகா (ஈ) கட்டவ்டா

3. இயக்குநர் பாலு மகேந்திரா இயக்கிய ஒரு திரைப்படம் ?

(அ) தண்ணீர் தண்ணீர் (ஆ) தேவதாஸ்

(இ) அழியாத கோலங்கள் (ஈ) பாசமலர்

4. தமிழ்மொழியைத் தூது அனுப்பும் நூல்?

(அ) சிலப்பதிகாரம் (ஆ) மணிமேகலை

(இ) தமிழ்விடுதூது (ஈ) அழகின் சிரிப்பு

5. நாட்டுப்புறவியலைக் குறிக்கும் 'Folklore' என்ற சொல்லை உருவாக்கியவர்

(அ) விளாடிமிர் பிராப் (ஆ) வில்லியம் ஜான் தாமஸ்

(இ) எமினோ (ஈ) பறோ

6. 'கிளவி' என்னும் சொல்லின் பொருள்?

(அ) சொல் (ஆ) கிழவி

(இ) குளவி (ஈ) குழவி

**7 முதல் 14 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றோ இரண்டோ வாக்கியங்களில் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம்.**

**(4 × 2 = 8)**

7. ஹைகூ கவிதையின் வகைகள் இரண்டினை எழுதுங்கள்.

8. 'வலைப்பூ' (*Blog*) குறித்து சிறுகுறிப்பு எழுதுங்கள்.

9. காடுகளை அழிப்பதால் பறவைகளும் விலங்கினங்களும் இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றன எனவே காடுகளைப் பாதுகாப்பதன் அவசியத்தைக் குறித்து துணுக்குச் செய்தி தயார் செய்யுங்கள்.

10. அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி இவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை எழுதுங்கள்.

11. புதுக்கவிதையின் இலக்கணமாக மு. மேத்தா கூறும் இரண்டு கருத்துக்களைத் எழுதுங்கள்.

12. சைபர்க்ரைமில் ஏற்றுக்கொள்ளப்படும் புகார்கள் இரண்டினைக் குறிப்பிடுங்கள்.

13. ‘ஒலியியல்’ – சிறு விளக்கம் தருக.

14. பின்வரும் நூல்களுள் அறநூல்களை மட்டும் எடுத்து எழுதுக.
நாலடியார், முல்லைப்பாட்டு, ஏலாதி, பதிற்றுப்பத்து, இன்னிலை.

**15 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரை பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம் (5 × 4 = 20)**

15. செம்மொழித் தகுதிப்பாடுகள் நான்கினை எழுதுங்கள்.

16. ‘தங்கமீன்கள்’ என்ற திரைப்படத்தின் சிறப்பினை எடுத்துக்கூறி அதன் இயக்குநர் ராம் அவர்களுக்கு பாராட்டுக் கடிதம் எழுதுங்கள்.

17. ‘நமக்கு இருப்பது போல் பறவைகளுக்கு நாடுகளும் எல்லைகளும் இல்லை’ என்னும் அப்துல் ரகுமான் கருத்தினை விமர்சனம் செய்து உரை குறிப்பு தயார் செய்யுங்கள்.

18. கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளுக்கு விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.
    - பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்.
    - சிறுதுரும்பும் பல்குத்த உதவும்.

19. சரியாகப் பொருத்துக.
    (அ) மானுடம் – ந. பிச்சமூர்த்தி
    (ஆ) அறிவு – ஞானக்கூத்தன்
    (இ) குருவிக்கு வேண்டுகோள் – மு. மேத்தா
    (ஈ) எதுபுதுக்கவிதை – அப்துல் ரகுமான்

20. உங்கள் பகுதி தமிழ்ச்சங்கத்தில் நிகழவிருக்கும் பேச்சுப் போட்டியில் பங்குபெற 'தமிழ்மொழியின் சிறப்புகள்' என்ற தலைப்பில் குறிப்புத் தயார் செய்யுங்கள்.

21. தரப்பட்டுள்ள மரபுத் தொடர்களுக்கு பொருள் எழுதி வாக்கியத்தில் அமைக்கவும்.

- செவிசாய்த்தல்.
- நாடு நீங்கினார்.

22. போரினால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும் வகையில் துண்டு பிரசுரம் தயார் செய்யுங்கள்.

23. 'மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து'

- என்னும் குறளுக்கு இணங்க அக்கால மக்கள் விருந்தோம்பல் மேற்கொண்டமையை இன்றைய விருந்தோம்பல் பண்புடன் ஒப்பிட்டு வானொலி உரை தயார் செய்யுங்கள்.

24. உங்கள் பள்ளி இலக்கியமன்றம் சார்பாக நடைபெறவிருக்கும் பட்டிமன்றத்தில் வாழ்வை மேம்படுத்த உதவுவது அற இலக்கியமா? பக்தி இலக்கியமா? ஏதேனும் ஓர் அணியில் பேசுவதற்கான பட்டிமன்றக் குறிப்புத் தயார் செய்யுங்கள்.

**25 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்கு ஒரு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 5 வீதம். (3 × 5 = 15)**

25. அப்துல் ரகுமானின் 'மானுடத்தின் திருவிழா' என்னும் கவிதையைப் பாராட்டிப் பாராட்டுரை தயார் செய்யுங்கள்.

26. வலைத்தளங்களை சரியாகப் பயன்படுத்தாததால் விளையும் தீமைகளைச்சுட்டிக் காட்டி பத்திரிக்கையில் வெளியிடுவதற்கான பத்திரிகைச்செய்தி தயார் செய்யுங்கள்.

27. ‘அருளெனும் ஜாலவித்தை

செலவாணி ஆகாதய்யா

மடமையால் உலகைச் செய்தால்

அறிவினால் களைதல் தவறா?

என்னும் நா. பிச்சமூர்த்தியின் கவிதை வரிகள் அறிவியல் வளர்ச்சியின் இன்றியமையாமை உணர்த்தும் பாங்கினைத் தொகுத்து எழுதுங்கள்.

28. ‘வாய்மொழி இலக்கியங்கள் வாழ்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி’ – இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு சிறுகட்டுரை எழுதுங்கள்.

29. உங்கள் பள்ளியில் நடைபெறவிருக்கும் தமிழ் மன்றவிழாவில் ‘நாட்டுப்புறவியலின் தனித்தன்மைகள்’ எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவதற்கான சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.

30. பின்வரும் குறிப்புகளின் துணைக்கொண்டு தோல் பாவைக் கூத்தின் தயாரிப்பு துணுக்கங்களை பற்றிய விளக்கக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
குறிப்பு: பாவுரா – கருவி – தோல்

பாவைகளை இயக்குதல்.

**31 முதல் 36 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம். (3 × 6 = 18)**

31. ‘குருவிக்கு வேண்டுகோள்’ என்ற கவிதையை மனதிற்கொண்டு நகரமயமாதலினால் விளைந்த தீமைகளைப் பற்றிய ஒரு தலையங்கம் தயார் செய்யுங்கள்.

32. பின்வரும் பாடலை நயம்பாராட்டி எழுதுங்கள்

“தனிமைச் சுவையுள்ள சொல்லை ‾ எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் – தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்”

-குறிப்பு: ஓசைநயம், சொல்நயம், பொருள் சிறப்பு.

33. ‘பச்சைவயல்’ என்ற திரைக்கதையில் இடம்பெறும் தர்மு எனும் கதாபாத்திரத்தின் பண்பு நலன்களைத் திறனாய்வு செய்யுங்கள்.

34. உங்கள் பள்ளி கலைவிழாவில் வருகைதரவிருக்கும் கூத்துக்கலைஞர் ஒருவரை நேர்காணல் நடத்த 6 வினாக்கள் கொண்ட வினா நிரல் தயார் செய்யுங்கள்.

35. ‘அழிவில் அவை நீக்கி ஆறு உய்த்தழிவின்கண்
அல்லல் உழைப்பதாம் நட்பு’

‾ இக்குறள் உணர்த்தும் நட்ப்பின் சிறப்பினைக் குறித்து விளக்கக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

36. உங்கள் பள்ளியில் நிகழவிருக்கும் பேச்சுப் போட்டியில் பங்குபெற ‘தமிழ் மொழியின் சிறப்புகள்’ என்ற தலைப்பில் சிறுகட்டுரை தயார் செய்யுங்கள்.

**37 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு இரு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம். $(2 \times 8 = 16)$**

37. சுற்றுச்சூழல் தினவிழாவை முன்னிட்டுப் பள்ளியில் நடைபெறவிருக்கும் கட்டுரைப் போட்டியில் பங்கேற்க ‘இயற்கையோடு இனைந்த வாழ்வே நலமான வாழ்வு’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்பு : இயற்கையின் பயன், பாதுகாத்தல், வழிமுறைகள்.

38. ‘இணையக்குற்றங்களும் மாணவர்களும்’ எனும் தலைப்பில் பள்ளிக்கூட ஆண்டு – மலரில் வெளியிடுவதற்கான கட்டுரை தயாரியுங்கள். குறிப்புகளைப் பயன்படுத்தவும்.

- விளம்பரங்கள் – பணமோசடி –
- போதைப் பொருட்கள் – பாலியல் ரீதியான தொல்லைகள்.

39. ‘இன்றைய சமூக வாழ்வியலில் ‘ஊடகங்களின் தாக்கம்’ என்ற தலைப்பில் பள்ளி ஆண்டு மலரில் வெளியிடுவதற்கான கட்டுரை எழுதுங்கள்.

குறிப்பு – வலைப்பூ – இணையதளம்

- பத்திரிக்கைகள் – விளம்பரங்கள்

40. உங்கள் பள்ளி இலக்கிய மன்றம் சார்பாகத் தமிழ்மொழியின் இனிமை குறித்து நடைபெறவிருக்கும் கருத்தரங்கத்தில் ‘காலந்தோறும் தமிழ் மொழியின் வளர்ச்சி’ எனும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள்.

. தொன்மை – தனித்தன்மைகள்

. பிறமொழிகலவாமை – மேன்மைபடுத்துவதற்கான வழிமுறைகள்.